**சுருக்கம்**

விதிகள் – தமிழ்நாடு 2007ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திட்டங்கள் மற்றும் பணிகளுக்கான மதிப்பீடுகள் மற்றும் ஒப்பந்தங்களுக்கான வழிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் தயாரித்தல்) விதிகளில் திருத்தம்- அறிவிக்கையிடப்படுகிறது.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ஊ.1(1)) துறை**

**அரசு ஆணை (நிலை) எண்.131**

**நாள்: 06.12.2022.**
**சுபகிருது, கார்த்திகை –20**
**திருவள்ளுவர் ஆண்டு 2053**

**படிக்கப்பட்டவை:**

1. அரசாணை (நிலை) எண்.203, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ஊ.1) துறை, நாள் 20.12.2007.
2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடிதம் ந.கஎண்.26216/2022/PR.I-I.3, நாள் 12.09.2022.

******

**ஆணை:**

பின் இணைக்கப்பட்ட அறிவிக்கையானது 06.12.2022–ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசு சிறப்பிதழில் வெளியிடப்படும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

பெ. அமுதா,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பணி மேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை – 79.
(06.12.2022–ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசு சிறப்பிதழில் வெளியிடுவதற்கும் அறிவிக்கையின் 500 படிகளை அரசிற்கு அனுப்புவதற்கும்).
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை – 15.

அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (சென்னை நீங்கலாக).

(தங்கள் மாவட்டத்திலுள்ள உள்ளாட்சி அமைப்புகளின் அனைத்து செயல்படுத்தும் நிறுவனங்களுக்கு இணைக்கப்பட்டுள்ள அறிவிக்கையை அனுப்புமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்).

<u>**நகல்**</u>

செயலாளர், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை – 9.
சட்டத்துறை, தலைமைச் செயலகம், சென்னை – 9.
மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அனைத்து பிரிவுகள்,
சென்னை – 9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பா. [signature] 6/12/22

பிரிவு அலுவலர்.

**பிற்சேர்க்கை.**

**அறிவிக்கை.**

1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 242–ஆவது பிரிவின் உட்பிரிவு (1) மற்றும் உட்பிரிவு (2)–இன் உட்கூறுகள் (xv) மற்றும் (xx)ஆம் பகுதிகளில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் 2007–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திட்டங்கள் மற்றும் பணிகளுக்கான மதிப்பீடுகள் மற்றும் ஒப்பந்தங்களுக்கான வழிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் தயாரித்தல்) விதிகளில் பின்வரும் திருத்தத்தினை இதனால் செய்கிறார்:–

**திருத்தம்.**

மேற்சொன்ன விதிகளில், விதி 3–இல் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணைகளுக்கு பதிலாக பின்வரும் அட்டவணைகள் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்:–

**“அட்டவணை–I.**

**கிராம ஊராட்சி.**

| மதிப்பீட்டுத் தொகை (1) | தகுதிவாய்ந்த நிர்வாகம் (2) |
|---|---|
| 1. ரூபாய் ஐந்து இலட்சத்திற்கு மேற்படாத பணிகள். | கிராம ஊராட்சி. |
| 2. ரூபாய் ஐந்து இலட்சத்திற்கு மேற்பட்ட ஆனால் ரூ.50 இலட்சத்திற்கு மேற்படாத பணிகள். | மாவட்ட ஆட்சியர். |
| 3. ரூபாய் 50 இலட்சத்திற்கு மேற்பட்ட பணிகள். | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர். |

**அட்டவணை–II.**

**ஊராட்சி ஒன்றியக் குழு.**

| மதிப்பீட்டுத் தொகை (1) | தகுதிவாய்ந்த நிர்வாகம் (2) |
|---|---|
| 1. ரூபாய் 25 இலட்சத்திற்கு மேற்படாத பணிகள். | ஊராட்சி ஒன்றியக் குழு. |
| 2. ரூபாய் 25 இலட்சத்திற்கு மேற்பட்ட ஆனால் ரூ.50 இலட்சத்திற்கு மேற்படாத பணிகள். | மாவட்ட ஆட்சியர். |
| 3. ரூபாய் 50 இலட்சத்திற்கு மேற்பட்ட பணிகள். | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர். |

## அட்டவணை–III.

## மாவட்ட ஊராட்சி.

| மதிப்பீட்டுத் தொகை (1) | தகுதிவாய்ந்த நிர்வாகம் (2) |
|---|---|
| 1. ரூபாய் 50 இலட்சத்திற்கு மேற்படாத பணிகள். | மாவட்ட ஊராட்சி. |
| 2. ரூபாய் 50 இலட்சத்திற்கு மேற்பட்ட ஆனால் ரூ.1 கோடிக்கு மேற்படாத பணிகள். | மாவட்ட ஆட்சியர். |
| 3. ரூபாய் 1 கோடிக்கு மேற்பட்ட பணிகள். | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர். |

".

பெ. அமுதா,
அரசு முதன்மைச் செயலாளர்.